
ஸ்ரீ ஸத்குரு துணை

ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

# ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்

# தபோவனம் மஹாகும்பாபிஷேகம்



ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் அமைந்துள்ள அதிஷ்டான அருளாலயம், மணிமண்டப ஆலயம், மூர்த்திகள் சந்நிதி, ராஜகோபுரம் ஆகியவற்றுக்கு நடைபெறும் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன

# மஹாகும்பாபிஷேக பத்திரிகை

## 16. 06. 2024 – ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீ ஸத்குரு துணை

# ஸ்ரீ ஞானானந்த தபோவனம் மஹாகும்பாபிஷேகம்

ஞானகணேசா சரணம் சரணம் ! ஞானஸ்கந்தா சரணம் சரணம் !
ஞானபுரீசா சரணம் சரணம் ! ஞானாம்பிகையே சரணம் சரணம் !
ஞான ஸத்குரோ சரணம் சரணம் ! ஞானானந்தா சரணம் சரணம் !

சிந்தயாபி சிதாகாசே காஷாயவஸ்திர தாரிணம்
ஞானானந்த தபோவநே லிங்க ரூபஞ்ச தாரிணம் |
ஸகல சாஸ்திர ஸம்பன்னம் ஸர்வாபீஷ்ட பலப்ரதம்
ஞானானந்தகிரீம் வந்தே பக்தானுக்ரஹ காரணம் ||

ஓம் ஞானானந்தம்! ஞானானந்தம்! ஞானானந்தம்!

ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், கன்னட தேசத்தில் மங்களாபுரியில் அவதரித்து அதிபால்யத்திலேயே சக்திநிபாதமுற்று, ஆதிசங்கரர் நிறுவிய ஜோதிர் மடத்தின் பீடாதிபதியாகிய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ சிவரத்னகிரி ஸ்வாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு, அவரது மஹாசமாதிக்குப்பின் அந்த பீடத்தைத் துறந்து இமயமலையின் பனிக்குகைகளில் நெடுங்காலம் கடுந்தவமியற்றி, பாரதம் முழுவதும், நேபாளம், பர்மா, இலங்கை முதலிய ஏனைய நாடுகளிலும் பாதயாத்திரையாக சஞ்சாரம் செய்தார்.

கடைசியில் சென்ற நூற்றாண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள ஆட்டையாம்பட்டி கிராமத்திலும், விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூருக்கு அருகில் வியாக்ரபாதரும் மற்ற சித்தர்களும் வாழ்ந்த புராதன சித்தலிங்கமடம் என்ற ஸ்தலத்திலும், தங்கி அருளாட்சி புரிந்து, சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு திருக்கோவிலூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் திருவண்ணாமலை செல்லும் நெடுஞ்சாலையில், சித்தர்கள் பலர் வாழ்ந்து அருளாசி வழங்கி அடங்கிய தக்ஷிண பினாகினி என்னும் தென்பெண்ணை நதியின் வடகரையில், பார் புகழும் மார்க்கண்டேயரைப் பெற்ற மிருகண்டு முனிவரின் தவச்சாலையாய் விளங்கிய புனிதமான இடத்தில், ஸ்ரீ ஞானானந்த தபோவனம் என்னும் அத்யாத்ம வித்யாலயமாம் ஆஸ்ரமத்தை நிறுவினார்கள்.

ஸத்குருநாதர் உலகம் போற்றும் உத்தம ஞானகுருவாய் கருணைக்கடலாய். கலியுக வரதராய், கற்பக விருக்ஷமாய். மக்களை உய்விக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டு, ஈடிணையற்ற அருட்பிழம்பாய் விளங்கியவர். ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் தம் பெருங்கருணையால், பாமர மக்களும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டுய்ய ஸ்ரீ ஞானகணேசர், ஸ்ரீ ஞானஸ்கந்தர், ஸ்ரீ ஞானாம்பிகை, ஸ்ரீ ஞானபுரீஸ்வரர், ஸ்ரீ ஞான மஹாலக்ஷ்மி, ஸ்ரீ ஞான வேணுகோபாலர், ஸ்ரீ ஞான தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ ஞான ஆஞ்சனேயர், ஸ்ரீ சண்டிகேஸ்வரர், ஸ்ரீ ஞானநடராஜர், ஸ்ரீ ஞானதுர்க்கை, நவக்ரஹ மூர்த்திகள், ஸ்ரீ ஞானகாலபைரவர் முதலான மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

ஸ்ரீ ஸத்குருநாதரவர்கள், குருபக்தியின் மேன்மையை வலியுறுத்தும் விதமாக தபோவனத்தில் திருவடி பூஜைக்கு (பாதுகை பூஜை) முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். ஆழ்ந்த குருபக்தியுடனும், சிரத்தையுடனும் திருவடி பூஜையில் பக்தர்கள் பங்கேற்க வலியுறுத்துவார்கள். 1964ல் ஸ்ரீ சங்கர ஜயந்தியன்று தாமே மிகுந்த பக்தியுடன் தம் சிரத்தில் ஆசார்யாள் பாதுகைகளை சுமந்து சென்ற காட்சி பக்தர்களை பக்திப் பரவசப்படுத்தி, குருபாதுகா மகிமையை உணர்த்தியதை மறக்க இயலாது. அவ்வகையில் இன்றளவும், ஸத்குருநாதரால் ஸ்ரீ ஆசார்யாள் திருவடி என்ற ஆதிசங்கரர் பாதுகை மற்றும் ஸ்ரீ அனுக்கிரஹ மூர்த்தி திருவடி என்று ஆவாகித்து குறிப்பிடப்பட்ட இரண்டு பாதுகைகளுக்கு தினமும் பூஜை நடைபெற்று வருகிறது. அனுக்கிரஹ மூர்த்தியாக ஸத்குருநாதர் அனுக்கிரஹத்தை பிரவாகமாக அளித்து வருவது நிதர்சனம்.

ஸத்குரு ஒரு நீடுயர்ந்த ஞானமலை. காலக்கணக்குக்கு அடங்காத நெடுவாழ்வு வாழ்ந்த ஞானசித்தர். பக்தர்களுள் பரம பக்தராய், ஞானிகளுள் நிறை ஞானியாய், குருவிற் சிறந்த குருபரனாய், அன்பர்க்கு அருளாரமுதம் பொழியும் தெய்வமாய்த் திகழ்ந்த கருணாமூர்த்தி. சொல்லகன்ற சாரப்பொருளாய், உள்ளுறை ஒளியை உணர்த்தும் ஞானகுரு. அன்னையாய், அப்பனாய், தொழுந்தோறும் காக்கும் எளிமைத் தெய்வம். நாமஸங்கீர்த்தனம் பரந்து நாடெல்லாம் செழிக்க அருளிய ஞானமூர்த்தி.

தனது இடைவிடாத ஆழ்ந்த தவத்தால் அகிலவுலகையும் பாவனமாக்கி அனுக்ரஹித்த கலியுகவரதனாய், நிகரற்ற அருட்பிழம்பாய், அத்வைத ரசமாய், அருமறையின் சுவையாய்த் திகழ்ந்த இந்த ஆனந்த ஞானப்பழம், 1974 ஜனவரி மாதத்தில் அகண்ட பரவெளியிலே கலந்தது. பார்த்தோர் பரவசம் கொள்ளும் வசீகரமான தெய்வீகத் தோற்றம் நம் புறக்கண்ணில் இருந்து மறைந்திடினும், விதேஹ மஹாஸமாதியில் அமர்ந்து, நிர்க்குண நிஜானந்தகனனாய், அன்று போல் இன்றும் பக்தர்களுக்கு அவர் அனுக்ரஹித்துக் கொண்டிருப்பதை பக்தர்கள் தம் அனுபவத்தில் உணர்ந்தே வருகின்றனர்!

ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளுக்கும், ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் அதிஷ்டான அருளாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஞானமஹாலிங்கத்திற்கும், மணிமண்டபத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஸத்குருநாதரின் சந்நிதிக்கும், ராஜகோபுரத்திற்கும், ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம், நிகழும் க்ரோதி வருடம், ஆனி மாதம் 2ஆம் தேதி (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை, சுக்ல பட்ச தசமி, ஹஸ்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில், காலை 6.30 முதல் – 8.00 மணிக்குள், மிதுன லக்னத்தில், ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில், ஸத்குரு திருவுளங்கொண்டு செய்வித்தருள ஆக்ஞாபித்தபடி பின்வரும் நிகழ்ச்சி நிரல்படி நடைபெறவுள்ளது.

இப்புனிதப் பெருவிழாவில் அன்பர்கள் அனைவரும் வந்திருந்து, பங்கெடுத்துக் கொண்டு ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் திருவருளைப் பெற்றுய்யுமாறு பிரார்த்திக்கிறோம்.


23.12.2023

டிரஸ்டிகள்
ஸ்ரீ ஞானானந்த தபோவனம்



ஸர்வஸாக்ஷி
ஸ்வரூபினம்

ஸர்வ பூத
தயாபரம்






ஸ்வபாவ சின்மயானந்தம்
க்ருபாபூர்ணம் ஜகத்பதிம்।
அரிஷட்வர்க்க ஜேதாரம்
ஞானானந்த குரும் பஜே।।


இயற்கையாகவே பேரறிவு மயமாகவும்,
ஆனந்த வடிவினராகவும் இருப்பவரும்,
கருணை நிறைந்தவரும்,
(ஆன்ம) உலகை ஆள்பவரும்,
அறுவகை (ஆசை கோபம் கருமித் தனம்,
மனமயக்கம், கர்வம், பொறாமை என்ற)
உட்பகைகளை வென்றவரும் ஆகிய
ஸ்ரீ ஞானானந்த குருவை வழிபடுகிறேன் !





ஸந்முனீந்த்ர
சிரோரத்னம்


பரஞ்ஜோதி
ஸ்வரூபம்



நித்யானந்தம் நிர்விகாரம்
ஞானபாவ அனுபோதகம்।
ஸதாலம்பம் நித்யத்ருப்தம்
ஞானானந்த குரும் பஜே॥




அழிவற்ற ஆனந்தமே உருவாய்க் கொண்டவரும், மாறுபாடு ஏதும் இல்லாதவரும், ஞானத்தின் நுட்பத்தை செவ்வனே போதனை செய்பவரும், கேவல ஸத்கனமாம் ப்ரஹ்மத்திலே நிஷ்டை உடையவரும், (ஆகவே ஆத்ம திருப்தராய்) என்றும் நிறைந்த மனம் உடையவருமாகிய ஸ்ரீ ஞானானந்த குருவை வழிபடுகிறேன் !



## ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

# மஹாகும்பாபிஷேகம்

**12.06.2024 - 16.06.2024**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **12.06.2024**<br>புதன் கிழமை<br>வைகாசி 30 | காலை<br>5.00 மணி முதல் | மங்கள இசை, அனுக்ஞை<br>விக்னேஸ்வர பூஜை, யஜமான சங்கல்பம்<br>கோ பூஜை, மஹா கணபதி ஹோமம்<br>நவக்கிரக ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம் |
| | மாலை<br>4.30க்கு மேல் | வாஸ்து சாந்தி, ம்ருத் சங்க்ரஹணம்,<br>பிரவேசபலி |
| **13.06.2024**<br>வியாழக் கிழமை<br>வைகாசி 31 | காலை<br>7.30க்கு மேல் | சாந்தி ஹோமம், திசா ஹோமம்,<br>மூர்த்தி ஹோமம் |
| | மாலை 4.00<br>மணிக்கு மேல் | அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்,<br>கும்பாலங்காரம், கலாகர்ஷணம்,<br>யாகசாலை ப்ரவேசம்,<br>முதல்கால யாகசாலை பூஜை,<br>மூர்த்தி, தத்வ, கலா மூல மந்திர ஹோம<br>த்ரவ்யாஹுதி, நவாவரண பூஜை |
| | இரவு 8.00<br>மணிக்கு | மங்கள மஹாபூர்ணாஹுதி<br>உபசார தீபாராதனை |
| **14.06.2024**<br>வெள்ளிக் கிழமை<br>வைகாசி 32 | காலை 7.00<br>மணிக்கு மேல் | விசேஷ சந்தி. பாவனா அபிஷேகம்,<br>இரண்டாம் கால யாகசாலை பூஜை<br>அதிஷ்டானம், மணிமண்டபம், மூர்த்திகள்,<br>ராஜகோபுர யாகசாலைகளில் விசேஷ<br>மூலமந்திர ஹோம த்ரவ்யாஹுதி,<br>நவாவரண பூஜை |
| | காலை 10.00<br>மணிக்கு | மங்கள மஹாபூர்ணாஹுதி<br>உபசார தீபாராதனை |
| | மாலை 5.00<br>மணி அளவில் | விசேஷ சந்தி, பாவனா அபிஷேகம்<br>மூன்றாம் கால யாகசாலை பூஜை<br>அதிஷ்டானம், மணிமண்டபம், மூர்த்திகள்,<br>ராஜகோபுர யாகசாலைகளில் விசேஷ<br>மூலமந்திர ஹோம த்ரவ்யாஹுதி,<br>நவாவரண பூஜை |
| | இரவு 8.00 | மங்கள மஹாபூர்ணாஹுதி,<br>உபசார தீபாராதனை |

| | | |
|---|---|---|
| **15.06.2024**<br>சனிக் கிழமை<br>ஆனி 1 | காலை **7.00**<br>மணி அளவில் | விசேஷ சந்தி, பாவனா அபிஷேகம்,<br>நான்காம் கால யாகசாலை பூஜை,<br>அதிஷ்டானம், மணிமண்டபம், மூர்த்திகள்,<br>ராஜகோபுர யாகசாலைகளில் விசேஷ<br>மூலமந்திர ஹோம த்ரவ்யாஹுதி,<br>நவாவரண பூஜை |
| | காலை **10.00**<br>மணி அளவில் | மங்கள மஹாபூர்ணாஹுதி,<br>உபசார தீபாராதனை |
| | மாலை **5.00**<br>மணி அளவில் | விசேஷ சந்தி, பாவனா அபிஷேகம்,<br>ஐந்தாம் கால யாகசாலை பூஜை,<br>அதிஷ்டானம், மணிமண்டபம், மூர்த்திகள்,<br>ராஜகோபுர யாகசாலைகளில் விசேஷ<br>மூலமந்திர ஹோம த்ரவ்யாஹுதி,<br>நவாவரண பூஜை,<br>பிம்ப சுத்தி ரக்ஷாபந்தனம், ஸ்பர்ஸாஹுதி,<br>தத்வார்ச்சனை |
| | இரவு **8.30**<br>மணி அளவில் | மங்கள மஹாபூர்ணாஹுதி,<br>உபசார தீபாராதனை |
| **16.06.2024**<br>ஞாயிற்றுக் கிழமை<br>ஆனி 2 | காலை **4.00**<br>மணி அளவில் | ஆறாம் கால யாகசாலை பூஜை<br>அதிஷ்டானம், மணிமண்டபம், மூர்த்திகள்,<br>ராஜகோபுர யாகசாலைகளில் விசேஷ மூல<br>மந்த்ர ஹோம த்ரவ்யாஹுதி,<br>நவாவரண பூஜை |
| | காலை **6.00** | மங்கள பூர்ணாஹுதி |
| | காலை **6.30** | யாத்ராதானம், கடம் புறப்பாடு |
| | காலை<br>**7.05**க்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து<br>விமானங்கள் **மஹா கும்பாபிஷேகம்** |
| | காலை<br>**7.20**க்கு | ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் முதல் அனைத்து<br>மூர்த்திகளுக்கும் **மஹா கும்பாபிஷேகம்** |
| | காலை<br>**7.45**க்கு மேல் | ஸ்ரீ ஞானானந்த மஹாலிங்கம்,<br>மணி மண்டபம் **மஹா கும்பாபிஷேகம்** |
| | மாலை **4.00**<br>மணிக்கு | மஹா அபிஷேகம்,<br>தீபாராதனை |

குறிப்பு:

1. ஜூன் 13 முதல் ஜூன் 16 வரை தபோவன டிரஸ்டின் சார்பில் மட்டும் பாதபூஜை நடக்கும்.
2. ஜூன் 12,13,14,15,16 ஆகிய தேதிகளில் வேத பாராயணம், சங்கர பாஷ்ய பாராயணம், தேவார (திருமுறை) பாராயணம், திவ்ய பிரபந்தம் பாராயணம், சொற்பொழிவு, பஜனை நடைபெறும்.
3. 17.06.2024 முதல் மண்டலாபிஷேக பூஜை மற்றும், தினசரி பூஜைகளும் வழக்கம்போல் நடைபெறும்.



**அன்னதானம் (ஜூன் 12 முதல் 16 வரை) - ரூ. 10,000**

**கும்பாபிஷேக தின சிறப்பு அன்னதானம் - ரூ. 20,000**

* மகாகும்பாபிஷேக அன்னதானங்களுக்கும் மற்றும் இதர கட்டிடப் பணிகளுக்கும் நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள் **‘G.THAPOVANAM SRI GNANANANDA TRUST’** பெயரில் அனுப்ப கேட்டுக் கொள்கிறோம். இந்த டிரஸ்ட் பெயரிலான நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு (80G) உண்டு. (PAN நம்பர் இணைக்கவும்)

Account Name : G.THAPOVANAM SRI GNANANANDA TRUST
Account Number : 510909010048752
IFSC : CIUB0000160
Bank : CITY UNION BANK
Branch : Tirukoilur
UPI ID : eze0013427@cub

---

***பூஜை, ஹோமம், யாகசாலை செலவுகளுக்கு நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள்,**

**‘SADGURU SWAMI SRI GNANANANDAGIRI MEMORIAL TRUST’**

Account No. : 510909010048919
IFSC : CIUB0000160
Bank : CITY UNION BANK, Tirukoilur Branch
UPI id : eze0013438@cub

- என்ற பெயரில் அனுப்ப கேட்டுக் கொள்கிறோம்.

**பூஜை, நன்கொடை ஆகியவற்றை, www.gnanananda.org என்ற தளத்தில் online pooja booking க்ளிக் செய்து, ஆன்லைனில் பதிவு செய்யலாம்.**

* சங்கல்பத்துடன் பெயர், நட்சத்திரம், கோத்திரம், தேதி ஆகியவற்றை சரியாக இணைக்கவும்.

---


# ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

**தபோவனம் 605756, விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.**

Mobile: +91 75983 65175
+91 75983 75175

For Enquiries: office@gnanananda.org
For Poojas: poojas@gnanananda.org
Website: www.gnanananda.org


**ஆசிரம நேரம்: 4.00 am to 12.00 noon - 4.30 pm to 8.00 pm**

**அலுவலக நேரம்: 6.00 am to 12.00 noon - 4.00 pm to 9.00 pm**

# ஸ்ரீ ஞானானந்த தபோவனம்
# மஹாகும்பாபிஷேகம்

**2024 ஜூன் 12 முதல் 16 வரை**

## திருப்பணி வேலைகள் விவரம்
## கும்பாபிஷேகம் - 2024

| வரிசை எண் | திருப்பணி வேலைகள் | செலவு மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மணிமண்டப திருப்பணி | **20.00** |
| 2 | ஞானவேணுகோபாலர் சந்நிதி திருப்பணி | **20.00** |
| 3 | மஹா கோபுரம் மற்றும் அனைத்து விமானங்கள் உள் பெயிண்டிங் | **25.00** |
| 4 | அதிஷ்டானம் திருப்பணி | **10.00** |
| 5 | அன்னை மண்டபம் திருப்பணி | **20.00** |
| 6 | பாத பூஜை மண்டபம் திருப்பணி | **25.00** |
| 7 | வெள்ளி பாதுகைத் தட்டு | **15.00** |
| 8 | **இதர திருப்பணி வேலைகள்**<br>உணவுக் கூடம் மற்றும் வைதீகர்கள் கட்டிடம் | **60.00** |

மேற்படி திருப்பணி வேலைகளுக்கு (எந்தத் தொகையானாலும்) நன்கொடை அனுப்புவோர், கீழ்க்காணும் டிரஸ்ட் பெயருக்கு அனுப்பவும்.

**SADGURU SWAMI SRI GNANANANDAGIRI MEMORIAL TRUST**

A/c No. : 510909010048919
IFSC : CIUB0000160
Bank : CITY UNION BANK, Tirukoilur Branch
UPI id : eze0013438@cub

ௐ

# மஹா கும்பாபிஷேகம்

## ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

**2024 ஜூன்12 முதல் ஜூன் 16 வரை**

## சேவைப் பட்டியல்

| வ.எண். | சேவைகள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம் (12.06.2024) | 3500 |
| 2. | நவக்கிரஹ ஹோமம் | 1250 |
| 3. | யாகசாலை அலங்காரம் (ஒரு மூர்த்தி - ஒரு காலம்) | 1000 |
| 4. | **யாகசாலை பூஜை**<br>அ) ஒரு காலத்துக்கு<br>ஆ) ஆறு கால பூஜைக்கும் | <br>7500<br>35000 |
| 5. | ரித்விக் போஜனம் (ஒரு நாள்) | 10000 |
| 6. | வெள்ளி கடம் (ஒன்று)<br>வெள்ளி பஞ்சபாத்திரம் | 20000<br>6000 |
| 7. | வெள்ளி கங்கணம் (ஒன்று) | 1000 |
| 8. | அஷ்ட பந்தன மருந்து (1 கிலோ) | 1000 |
| 9. | **மஹா அபிஷேகம்**<br>அ) மணிமண்டபம் மற்றும் அதிஷ்டானத்தில்<br>ஆ) அனைத்து மூர்த்திகளுக்கும் | <br>1500<br>2500 |
| 10. | மண்டலாபிஷேகம் (நாள் ஒன்றுக்கு) | 3500 |
| 11. | நவாவரண பூஜை (காலம் ஒன்றுக்கு) | 1000 |
| 12. | **வேத பாராயணம்** (ஒரு பாராயணத்துக்கு)<br>ரிக் வேதம் / யஜுர் வேதம் / சுக்ல யஜுர் வேதம் / சாம வேதம் / அதர்வண வேதம் | 7500 |
| 13. | **இதர பாராயணங்கள்** (ஒரு பாராயணத்துக்கு)<br>ஸ்ரீ சங்கர பாஷ்யம் / சிவ ஆகமம் / தேவாரம் / திவ்யப் பிரபந்தம் / ஸ்ரீமத் பாகவதம் | 7500 |
| 14. | புஷ்ப அலங்காரம் - (காலம் ஒன்றுக்கு) | 6000 |
| 15. | சிறப்பு பிரசாதம் (காலம் ஒன்றுக்கு) | 1500 |
| 16. | சிறப்பு பிரசாதம் (ஆறு காலங்களுக்கும்) | 7500 |
| 17. | வஸ்திரம் 9 x 5 (ஒன்றுக்கு)<br>(கலச வஸ்திரம் / வேதிக் வஸ்திரம் / ரித்விக் வஸ்திரம்) | 750 |

| | | |
|---|---|---|
| 18. | ஷிலா வஸ்திரம் | 250 |
| 19. | பூர்ணாஹுதி வஸ்திரம் (காலம் ஒன்றுக்கு) | 3000 |
| 20. | 9 கஜம் புடைவை ரவிக்கையுடன் (ஒன்று) | 1500 |
| 21. | 6 கஜம் புடைவை ரவிக்கையுடன் (ஒன்று) | 1000 |
| 22. | செப்பு கலசம் 2 லிட்., (கலசம் ஒன்றுக்கு) | 1500 |
| 23. | செப்பு கடம் 24 (கடம் ஒன்றுக்கு) | 500 |
| 24. | ஆசன பலகை (மரம்) | 500 |
| 25. | நெய் (காலம் ஒன்றுக்கு) | 3000 |

* பூஜை, ஹோமம், யாகசாலை செலவுகளுக்கு அனுப்ப
**SADGURU SWAMI SRI GNANANANDAGIRI MEMORIAL TRUST**
( A/c No. : 510909010048919 IFSC: CIUB0000160
Bank : CITY UNION BANK, Tirukoilur Branch. UPI id : eze0013438@cub )
**என்ற பெயரில் நன்கொடைகளை அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.**

**பூஜை, நன்கொடை ஆகியவற்றை,** www.gnanananda.org **என்ற தளத்தில்**
***online pooja booking*** **க்ளிக் செய்து, ஆன்லைனில் பதிவு செய்யலாம்.**

## அன்னதானத்துக்கு!

1. அன்னதானம் ₹ 10000
2. அன்னதானம் - கும்பாபிஷேக தினத்தில் ₹ 20000

**அன்னதானத்துக்கு எந்த ஒரு தொகையும் நன்கொடையாக அளிக்கலாம்!**

அன்னதானம் மற்றும் இதர கட்டிடப் பணிகளுக்கு நன்கொடை அளிப்பவர்கள், கீழ்க்காணும் டிரஸ்ட் பெயருக்கு அனுப்பவும். இதற்கு (80G) வருமான வரி விலக்கு உண்டு. (உடன் PAN நம்பர் இணைக்கவும்)

**Account Name : G.THAPOVANAM SRI GNANANANDA TRUST**
**Account Number : 510909010048752**
**IFSC : CIUB0000160**
**Bank : CITY UNION BANK**
**Branch : Tirukoilur**
**UPI ID : eze0013427@cub**

* சங்கல்பத்துடன் பெயர், நட்சத்திரம், கோத்திரம், தேதி ஆகியவற்றை சரியாக இணைக்கவும். மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சி விவரம் அழைப்பிதழில் உள்ளது.

QR Code / UPI ID மூலம் அனுப்பினால், accounts@gnanananda.org என்ற இமெயிலுக்கு அல்லது 75983 65175 எண்ணுக்கு தெரிவிக்கவும்.